# community
The New Apostolic Church around the world

02/2015/Tamil




சூரிச் நகரில் மாவட்ட அப்போஸ்தலர் கூட்டம்

## இதயம் ஆத்துமா மனதோடு

இயேசுவின் நாமத்தில் கேட்டல்

டொடோமா நகரில் தேவாராதனை

திரியேக தேவன்

புதிய அப்போஸ்தல சபை

# கிறிஸ்துவுக்குள் மகிழ்ச்சி



NAC International

என் அன்பின் சகோதர சகோதரிகளே

2015ல் சில மாதங்கள் கடந்துவிட்டன. மகிழ்ச்சியையும் அதேவேளையில் சோகம், துன்பம், துயரங்களையும் கூட அவை ஏற்படுத்தின. வருட துவக்கத்தில், "கிறிஸ்துவுக்குள் மகிழ்ச்சி" என்னும் இலட்சிய வாசகத்தை நான் முன்வைத்தபோது, அதன் பன்முகத்தன்மையை நான் சிந்திக்கவில்லை. சிலர் பூமிக்குரிய மகிழ்ச்சியெனக் கருதினார்கள். இதில் எவருக்குத்தான் பிரியமிருக்காது! ஆயினும் அந்த வாசகத்துக்கு மேலும் அதிகமான அர்த்தம் உள்ளது: தேவாராதனைகளில் கிடைக்கும் மகிழ்ச்சி, பாவமன்னிப்பு தரும் மகிழ்ச்சி, பரிசுத்த நற்கருணையில் அனுபவிக்கும் மகிழ்ச்சி ஆகியவை. இப்படிப்பட்ட ஐக்கியம், ஒன்றுகூடுதல், உற்சாகம் முதலிய அழகான தருணங்களை நாம் அனுபவித்திருப்பதில்லையா? நமது இலட்சிய வாசகம் தொடர்ந்து உயிரோட்டமுள்ளதாய் காத்துக்கொள்ளப்படும் என்று நான் திடமாய் நம்புகிறேன். அது ஒரு வார்த்தையாய் மட்டும் இருந்துவிடக்கூடாது.

"கிறிஸ்துவுக்குள் மகிழ்ச்சி" என்னும் 2015 பொன்மொழியைப் பற்றின சில சிந்தனைகள்:

- நாம் தேவபிள்ளைகளின் ஐக்கியத்தில் பாகமாய் இருப்பதால் களிகூருகிறோம். விசுவாச பாதையில் செல்வதோடு சபையின் அங்கத்தவர்களாகவும் நாம் விளங்குகிறோம்.
- கர்த்தர் நம்மில் அன்பாயிருக்கிறார், நமக்காக மரித்தார். நம் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன, அவருடைய பந்தியில் பங்குபெறுகிறோம். ஒவ்வொரு தேவாராதனையிலும் அவர் நமது நடுவில் வருகிறார், அவரை அனுபவிக்கிறோம்.
- கர்த்தர் மறுபடி வருகிறார். அவர் அதை வாக்குறுதி பண்ணினார். அதைக் காத்துக்கொள்வார். இதையல்லவா நாம் அனைத்திலும் மேலாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்? மணவாட்டியை அழைத்துச்செல்ல அவர் வருகிறார்.

இதில் நாம் சம்மதிக்கிறோம்: இது அற்புதமானது!

இதில் நாம் ஒன்றுசேர்ந்து மகிழ்கிறோம்! சங்கீதம் 103:2 கூறுகிறது: "அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே."

ஒரு மகிழ்ச்சியான காலத்தை ஆசிகூறுகிறேன்.

உங்கள்,



ஜோன்-லூக் ஷ்னைடர்

# இயேசுவின் நாமத்திலே கேட்டல்



NAC East Africa



தலைமை அப்போஸ்தலர் ஷ்னைடர் மற்றும் அப்போஸ்தலர்களை வரவேற்கும் பிள்ளைகள். தான்சானியா, டொடோமா 19.04.2015

யோவான் 14:14

"என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்."

பிரியமுள்ள எனது சகோதர சகோதரிகளே, இங்கு கிழக்கு ஆபிரிக்காவில் தேவஊழியத்தில் இன்று இந்த ஞாயிறு ஒரு சிறப்பான தினமாகும். ஆபிரிக்க மாவட்ட அப்போஸ்தலர்கள் எல்லோரும் இங்கு கூடியிருக்கிறார்கள். ஏனெனில், உங்கள் மாவட்ட அப்போஸ்தலர் இன்று ஓய்வுபெறுகிறார், ஒரு புதிய மாவட்ட அப்போஸ்தலர் நியமிக்கப்படுகிறார். கிழக்கு ஆபிரிக்க சபையில் இது ஒரு வரலாற்று சிறப்பான தினமாய் அமைகிறது. கவலைவேண்டாம், நமது எஜமான் கர்த்தரே! புதிதாய் ஒரு ஊழியக்காரன் நியமிக்கப்படுகிறார் மட்டுமே! தலைமை அப்போஸ்தலர், மாவட்ட அப்போஸ்தலர்கள் அப்போஸ்தலர்கள் யாவரும் கிறிஸ்துவுக்கு ஊழியக்காரர்கள் மட்டுமே. முன்பு இருந்தவரைப்போலவே புதிய மாவட்ட அப்போஸ்தலரும் கர்த்தருக்கு ஒரு ஊழியக்காரனாய் மட்டும் செயற்படுவார். நான் உட்பட ஒவ்வொருவரும் நமது விசுவாச இலக்கை நோக்கி உறுதியான அடியெடுத்து கிறிஸ்துவை சமீபிப்போம் என்பதே எனது வாஞ்சை. அவரைப்போல் மாறி, அவரைப்போல் செயற்பட்டு, அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவோம்.

நமது வேதவாக்கியத்தில் ஒரு அற்புத வாக்குறுதிஉள்டங்கியிருக்கிறது. ''என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்.'' மனிதருக்குள்ள எல்லா தேவைகளையும் எண்ணிப்பார்ப்போம்! இயேசுவின் நாமத்தில் கேட்டு அவை யாவும் நிறைவேறுமென்றால் எத்தனை அற்புதமாயிருக்கும். ஆயினும் சில நிபந்தனைகளை அவர் கூறுகிறார். முதலில் அவரை விசுவாசிக்கவேண்டும். அவரை ஒரு அதிசயம் செய்கிறவர் அல்லது ஒரு தீர்க்கதரிசி அல்லது நம் பிரச்சினைகளைத் தீர்க்கிறவர் என்று அல்லாமல், அவரே தேவகுமாரன் என்று விசுவாசிக்கவேண்டும். மனித இனத்திற்கு இரட்சிப்பு கொண்டு வரும் இரட்சகர், நம்மை நித்திய ஜீவனுக்காக ஆயத்தஞ்செய்கிறவர் என்று நாம் விசுவாசிக்க வேண்டும்.

இரண்டாவது நிபந்தனை: அவருடைய நாமத்திலே நாம் கேட்கவேண்டும். அதாவது, அவர் நமக்காக கேட்பதாக அது இருக்கவேண்டும். நமது ஜெபங்களுக்கு மறுமொழியை எதிர்பார்ப்போமெனில், இயேசுவே விண்ணப்பிப்பதைப்போன்ற ஜெபமாய் அது அமைய வேண்டும். மனிதர் இயேசுவிடம் வந்து விண்ணப்பித்தபொழுது, அவர்களிடம் விசுவாசம் இல்லாதிருந்ததை அவர் உணர்ந்தார். அவர்களின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ள முடியாதவரானார். சில பரிசேயர் அவரிடம் கூறினார்கள்:''உம்மால் ஒரு அடையாளத்தைக்காண விரும்புறோம்.''அதற்குஅவர் கூறினார்: ''இந்தப் பொல்லாத விபசார சந்ததியார் அடையாளத்தைத் தேடுகிறார்கள்; ஆனாலும், யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. யோனா இரவும் பகலும் மூன்றுநாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்ததுபோல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்தில் இருப்பார்.'' (மத்தேயு 12:39-40). அது ஒரு தெளிவான மறுமொழி: ''என்னை விசுவாசிக்கவேண்டுமானால் உயிர்த்தெழுதலை விசுவாசிக்கவேண்டும். வேறெந்த அடையாளமும் இங்கு அவசியமில்லை!

**நித்தியஜீவனே எப்பொழுதும் கர்த்தருக்குப் பிரதானமானது. முதன்மையானவற்றை விலக்கிவைக்கும்படி அவரிடம் கேட்கமுடியாது!**

பலிபீடத்தில் அப்போஸ்தலர்களும் கண்காணிகளும்





அன்பின் சகோதர சகோதரிகளே, தேவகுமாரனில் நாம் விசுவாசிக்கவேண்டும். நமது இரட்சகரை விசுவாசிக்கவேண்டும். நமக்காக அவர் ஜீவனைப் பலியாய் கொடுத்தார் என்று விசுவாசிக்கவேண்டும். ஒவ்வொருநாளும் காலையில், ஆண்டவரே உம் அன்பை காட்டுவதற்கு எனக்கு ஒரு அதிசயத்தைக் காட்டும் என்று நாம் விண்ணப்பிக்க முடியாது. அவர் நம்மை நேசிப்பதற்கு ஏற்கனவே அடையாளத்தை தந்திருக்கிறார்: அவர் நமக்காக மரித்தார்.

> ஒரு பலமான விசுவாசத்தை நாம் தேவனிடம் கேட்போமெனில் அதை அவர் நமக்குத் தருவார். ஏனெனில் அதையே நமக்காக அவர் மன்றாடுகிறார்

“ஒரு அதிசயத்தை நிறைவேற்றும். எனவே உமது ஊழியம் இரட்சிப்பின் ஊழியம் என்று நம்மால் அறியமுடியும்” என இயேசுவை நாம் நிர்ப்பந்திக்க முடியாது. இவர்கள் என் பிள்ளைகள்; இது என் ஊழியம் என்பதற்கு இந்நகரில் ஒரு அடையாளத்தை தேவன் வெளிப்படுத்தவேண்டியதில்லை. அவர் கூறுகிறார்: “தேவ ஊழியத்துக்கு எனது பிள்ளைகளே நிரூபணமாயிருக்கிறார்கள்; அவர்கள் புதுசிருஷ்டிப்பில் வளர்கிறார்கள்.” ஒருவித உயிர்த்தெழுதல் இங்கு இடம்பெறுகிறது. நம் பழைய மனிதன் இறக்கிறான்; புது சிருஷ்டியின் வடிவம் அதிகமதிகமாய் புலப்படுகிறது. புதிய சிருஷ்டிப்பு வளர்வதனால் தேவ ஊழியத்தை நாம் விசுவாசிக்கிறோம். பல உதாரணங்களை இயேசு தந்தார். ஒரு உவமையில் குறிப்பிட்டார்: ஒரு பிரபு தேசத்துக்குப் புறப்பட்டான். புறப்படமுன்பு தன் வேலைக்காரர்களில் பத்துபேரை அழைத்து ஒவ்வொருவருக்கும் ஒரு ராத்தலைக் கொடுத்துக் கூறினான்: “நான் திரும்பிவருமளவும் இதைக்கொண்டு வியாபாரம்பண்ணுங்கள்” (லூக்கா 19:13-21). அவன் திரும்பிவந்து கணக்கு விசாரித்தான். திரவியத்தை உபயோகப்படுத்தாதிருந்த ஒரு வேலைக்காரன் காரணம் கூறினான்: “நீர் கடினமுள்ள மனுஷனென்று அறிந்து, உமக்குப் பயந்திருந்தேன்.” ஆனால் அந்த வேலைக்காரனுக்கு ஒரு கட்டளை கொடுக்கப்பட்டிருந்ததையும், அதை







மாவட்ட அப்போஸ்தலர் லுபாசி தேவாராதனையில் பிரசங்கிக்கிறார்

அவன் செய்திருக்கவேண்டியதையும் கர்த்தர் சுட்டிக் காட்டினார். அவன் அதற்குக் கீழ்ப்படிந்திருக்கவேண்டும். இயேசு நமக்குக் கூறுகிறார்: "நான் தேவகுமாரன், ஆகையால் என் வார்த்தைகள் ஒழிவதில்லை!"

அநேகர் இன்றும் இயேசுவிடம் கேட்கக்கூடும்: "உம்முடைய சுவிசேஷத்தை மாற்றமுடியாதா? எனக்கு சந்தேகங்கள் உண்டு. நமது காலம், நாடு, நிலைமைகள் முதலியவற்றிற்கு ஏற்றபடி ஏன் மாற்றிக்கொள்ளக் கூடாது?" ஆனால், இயேசு அதைச் செய்யமாட்டார். அவரே தேவகுமாரன் என்று விசுவாசிக்கிறவர்கள், அவர் கூறியவை எல்லா நித்தியத்துக்கும் பெறுமதியானது என்பதை அறிவார்கள். நமக்காக சுவிசேஷத்தை அவர் மாற்றமாட்டார்.

பாவிகளைத் தண்டிக்கவேண்டும் என்று கர்த்தரிடம் கேட்பது பிரயோஜனமற்றது. சீஷர்கள் ஒருதடவை அவ்வாறு கேட்டார்கள்: "ஆண்டவரே எலியா செய்தது போல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா?" (லூக்கா 9:54). இயேசு அவர்களைக் கண்டித்தார். ஒரு தடவை வேதபாரகரும் பரிசேயரும் ஒரு பெண்ணை இயேசுவின் முன் கொண்டுவந்து கூறினார்கள்: "போதகரே இந்த ஸ்திரீ விபசாரத்தில் கையும் மெய்யுமாய் பிடிபட்டாள்" (யோவான் 8:4). இயேசு அவளைத் தண்டிக்கவேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். இயேசு அதை நிராகரித்தார். ஏனெனில் அது அவரது நினைவாயிருக்கவில்லை. ஒரு பாவியைத்தண்டிக்கும்படி இயேசுவிடம் கேட்பதில் பயனில்லை. பாவிகளை இரட்சிப்பதற்காகவே இரட்சகர் வந்தார். அரைமனதை ஆசீர்வதிக்கும்படி அவரிடம் கேட்பதும் பயனற்றது. பூரண இருதயத்தையே அவர் விரும்புகிறார். அநேகர் கடைசி வேளையில் பரலோக வாசற்கதவைத்தட்டுவார்கள் என்று மலைப்பிரசங்கத்தில் இயேசு விவரித்தார்.

“பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி, கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளிலே அநேகர் என்னை நோக்கி, கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை... என்று அவர்களுக்குச் சொல்லுவேன்" (மத்தேயு 7:21-23). அவர்கள் அவருடைய நாமத்தில் அற்புதங்களைச் செய்திருந்தாலும் மனப்பூர்வமாய் செய்யவில்லை என்பதை அவர் அறிவார்.

“எது நேரிடினும், பிதாவே, நாம் ஒன்றாயிருப்போம்” என்று சபையில் ஒவ்வொருவரும் ஜெபிக்கவேண்டும் என்பது எனது வாஞ்சை!

கர்த்தரின் ஆசீர்வாதத்தை அரைமனதோடும் கீழ்ப்படியாமையுடனும் நாம் கேட்கமுடியாது. நமது பிரச்சினைகளில் அவரது உதவியை நாடமுடியும். ஆனால் ஒரு பொய்யை அரங்கேற்றுவதற்கு அவரிடம் கேட்கமுடியாது. உடன்படிக்கையை மதிக்காமல் உதவியை நாம் எதிர்பார்க்கமுடியாது. அரைமனதை அவர் ஆசீர்வதிப்பதில்லை!

மரியாள், மார்த்தாள் இருவரிடமும் இயேசு சென்றிருந்தபோது, கர்த்தரின் பாதத்தண்டையில் உட்கார்ந்து அவர் கூறியதை மரியாள்செவிகொடுத்தாள். மார்த்தாளோ பற்பல வேலைகளில் ஈடுபட்டாள். இயேசுவிடம் வந்து கூறினாள்: "நான் தனியே வேலைசெய்யும்படி என் சகோதரி என்னை விட்டுவந்திருக்கிறதைக்குறித்து உமக்கு கவலையில்லையா? எனக்கு உதவிசெய்யும்படி அவளுக்குச் சொல்லும்" (லூக்கா 10: 40-42). நித்திய ஜீவனைக்காட்டிலும் அதிக முக்கியத்தை பூமி வாழ்வுக்கு நாம் கொடுப்பதை கர்த்தர் ஆமோதிக்கவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கமுடியாது. முதன்மையானவற்றை விலக்கி வைக்கும்படி கர்த்தரிடம் கேட்கமுடியாது. அது விசுவாசமின்மையை சாட்சியிடுகிறது. அது அவருடைய சித்தத்துக்கு ஏற்றதில்லை. நாம் விசுவாசிப்பதையே அவர் விரும்புகிறார்.

எனவே, எதை அவரிடம் கேட்போம்? அது எளிமையானது! அவர் தம் பிதாவிடம் கேட்டதை நாம் கேட்போம். பேதுருவிடம் இயேசு கூறினார்: "நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்



கிழக்கு ஆபிரிக்காவின் புதிய மாவட்ட அப்போஸ்தலராக ஜோசப் எக்குயா தலைமை அப்போஸ்தலரால் நியமிக்கப்பட்டார். பின்னால் நிற்பவர்கள் மா. அப்போஸ்தலர்கள் குவனாசி மற்றும் டெப்னர்.





ஓய்வு பெற்ற மாவட்ட அப்போஸ்தலருக்கு மலர்க்கொத்து வழங்கி நன்றி-செலுத்தப்பட்டது. மாவட்ட அப்போஸ்தலர்கள் பார்னஸ் (வலது), லுபாசி (நடுவில்) மற்றும் தலைமை அப்போஸ்தலர்

கொண்டேன்" (லூக்கா 22:32). ஒரு திடமான விசுவாசத்தை அவரிடம் கேட்கமுடியும்.எனவே எது நேரிட்டாலும், அடையாளங்களும், அற்புதங்களும் இல்லாமலே நாம் விசுவாசிக்கமுடியும். ஒரு பலமான விசுவாசத்தை கர்த்தரிடம் நாம் கேட்டால் அதை அவர் தருவார். அதையே நமக்காக அவர் வேண்டுகிறபடியினால் அதை அவர் நமக்கு தருவார்.

"உம்முடைய சித்தம் வருவதாக" என்று அவரிடம் நாம் கேட்கமுடியும். இது அத்தனை எளிதல்ல, ஏனேனில், நாம் துக்கப்படவும், வியாதியுறவும், இறக்கவும் தேவன் சித்தமாயிருக்கிறார் என்று தடவைகளில் நாம் தவறாய் சிந்திக்கிறோம். ஆனால், நாம் வருந்துவதை அவர் விரும்புவதில்லை. நாம் வருந்தினாலும் விசுவாசத்தில் நிலைத்திருக்கவேண்டும் என்று சித்தமாயிருக்கிறார். பிதாவின்சித்தத்தை அவர் சரியாக அறிந்திருந்தார். "என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று அவர் ஜெபித்தபொழுது, அவர் வருந்துவதையல்ல, கீழ்ப்படிவதையே பிதா விரும்புவதை அவர் அறிந்திருந்தார். எதுநேரிடினும் விசுவாசத்தில் நிலைப்பதற்கு நாம் முடிவெடுத்தோம்; எனவே இயேசு நமக்கு இதில் உதவுவார். கர்த்தர் எதிர்பார்க்கும் கிருபையை அவரிடம் நாம் கேட்பதை, இயேசுவின் நாமத்திலே கேட்டல் அர்த்தமாகிறது. கிருபையை நாம் பெறுவதற்கு என்னசெய்ய வேண்டும் என்று அவர் விவரித்தார். மனத்தாழ்மையும், மனந்திருந்துதலும், பிறரை மன்னித்தலும் இதில் நமக்கு அவசியம். கிறிஸ்துவின் சுவிசேஷம் அதுவே. இதைக் கைக்கொண்டு, கிருபையைக் கேட்டால், அதை அவர் வழங்குவார். நம்மை மன்னிக்கும்படி பரலோகத்தில் பிதாவிடம் இயேசு மன்றாடுவதை ஆதி சபையின் அப்போஸ்தலர்கள் குறிப்பிட்டனர். "ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்" (1 யோவான் 2:1). ஆதலால், மனத்தாழ்மை, மனந்திருந்துதல், மன்னித்தல் மூலமாக கிருபையைக் கேட்போம்.

## பிரதான சிந்தனைகள்

### இயேசு சம்மதிக்கும் விண்ணப்பங்களை நிறைவேற்றுகிறார்.

இயேசுவில் நமது விசுவாசத்தில் ஆழமாய் வேரூன்றியதாகவும், தேவசித்தத்துக்கு ஏற்றதாகவும் ஜெபங்கள் இருக்கவேண்டும். ஒரு பலமான விசுவாசத்திற்காக, சோதனைகளைச் சகிப்பதற்காக, கிருபைக்காக, ஒருமைப்பாட்டிற்காக, முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பிரயத்தனப்படுவதற்காக செய்யப்படும் ஜெபங்களை தேவன் ஆசீர்வதிக்கிறார்.

கிறிஸ்துவிடம் நமக்குள்ள விசுவாசத்தின் அடிப்படையில் அவருடைய நாமத்திலே, அவருடைய சித்தத்துக்கு ஏற்றபடி கேட்கப்படும் விண்ணப்பங்கள் நிறைவேறும்.

# வனாந்தரத்தில் தண்ணீர் தந்த தேவன்

(யாத்திராகமம் 17:1-7)


எகிப்தில் அடிமைகளாயிருந்த தம் ஜனங்களை, தேவன் விடுதலைபண்ணினார். இஸ்ரவேலர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வனாந்தரத்தில் யாத்திரைசெய்தார்கள். வாக்குறுதிசெய்யப்பட்ட தேசத்தை இன்னமும் அவர்கள் சென்றடையவில்லை.

உண்பதற்கு எதுவும் இல்லை. ஆகையால், இஸ்ரவேலர்கள் முறையிட்டார்கள். தேவன் ஒவ்வொரு நாளும் சாயங்காலத்தில் காடைகளையும், காலையில் மன்னாவையும் ஜனங்களுக்கு வழங்கினார். அவர்கள் தொடர்ந்து பிரயாணம்பண்ணினார்கள். அவர்களுக்குக் குடிக்க தண்ணீர் இல்லாதிருந்தது. தாகத்தால் மடிந்துபோவோம் என்று எண்ணினார்கள். மறுபடியும் மோசேயிடம் முறுமுறுத்தார்கள்.



"எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் தண்ணீரின்றி கொன்றுபோட எகிப்திலிருந்து ஏன் கொண்டுவந்தீர்?" என்று முறுமுறுத்து மேசேயிடம் தண்ணீர் கேட்டார்கள். "ஏன் கோபமடைகிறீர்கள்? ஏன் தேவனை நம்பாமல் நடக்கிறீர்கள்? அவர் உங்களை ஆதரிப்பார்" என்று மோசே கூறினான். "இந்த ஜனங்களுக்கு நான் என்ன செய்வேன், இவர்கள் என்மேல் கல்லெறியப் பார்க்கிறார்களே" என்று மோசே தேவனிடம் விண்ணப்பித்தான். தேவன் கூறினார்: "மூப்பரில் சிலரை உன்னோடே கூட்டிக்கொண்டு, நீ நதியை அடித்த உன் கோலை உன் கையிலே பிடித்துக்கொண்டு, ஜனங்களுக்கு முன்னே நடந்துபோ. ஒரேபிலே நான் உனக்கு முன்பாக கன்மலையின்மேல் நிற்பேன். நீ அந்த கன்மலையை அடி. அப்பொழுது ஜனங்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும்."

அனைத்தையும் இழந்தோம் என்று தோன்றினாலும்கூட, தேவன் நமக்கு உதவுவார்.



Mirella Fortunato



# விசுவாசப்பிரமாணம்

■ NAC International

**இவ்வருடம் செப்டம்பரில் புதிய அப்போஸ்தல சபையின் போதனாவிளக்கநூல் வினாவிடை வடிவத்தில் வெளிவருகிறது. அதில் உள்ளடங்கும் 750 வினாக்கள்/ விடைகளிலிருந்து சிலவற்றை கம்யூனிட்டி சஞ்சிகை அறியத்தருகிறது. இந்த சஞ்சிகை விசுவாசப்பிரமாணங்களையும் திரியேக தேவனையும் குறித்துக் கூறுகிறது.**

விசுவாசப் பிரமாணம் என்றால் என்ன?

ஒரு விசுவாசக் கோட்பாட்டின் அத்தியாவசிய உட் கருத்தின் சுருக்கமாய் ஒரு விசுவாசப்பிரமாணம் அமைகிறது. அப்படிப்பட்ட விசுவாசப்பிரமாணம் ஒரு குறிப்பிட்ட மதப்பிரிவின் அங்கத்தவர்கள் அறிக் கைபண்ணும் யாவற்றையும் உள்ளடக்குவதாய் அமைகிறது. ஒரு மதப்பிரிவு மற்ற மதப்பிரிவிலிருந்து வித்தியாசமான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதையும் ஒரு விசுவாசப்பிரமாணம் வெளிப்படுத்துகிறது.

முதலாவது கிறிஸ்தவ விசுவாசப்பிரமாணங்கள் எவ்வாறு உருவாகின?

முதலாவது கிறிஸ்தவ விசுவாசப்பிரமாணங்கள் "ஆதிகிறிஸ்தவ சபையின் விசுவாசப்பிரமாணங்கள்" என்று அழைக்கப்பட்டன. அவை இரண்டாம் நூற்றாண்டுக்கும் நான்காம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்டவை. இக்கா லத்திலேயே தேவதிரித்துவத்தின் கோட்பாடும், இயேசுகிறிஸ்துவின் சுபாவத்தின் சாராம்சமான கோட்பாடும் வடிவமைக்கப்பட்டன. விசுவாசத்தின் கருத்துகளில் விவாதங்கள் உருவானதால் இது அவசியமாகிற்று. உதாரணமாக, இயேசு சிலுவையில் மரிக்கவில்லை என்றும், அவர் உயிர்த்தெழவில்லை என்றும் கருத்து நிலவியது. விசுவாசப்பிரமாணங்களின் இயங்குதல் அதை விசுவாசிப்பதில் தங்கியிருந்தது.

ஆதிகிறிஸ்தவ சபையில் பிதானமானதாய் விளங்கிய விசுவாசப்பிரமாணம் எவை?

இரண்டு முக்கியமானவைகள்: அப்போஸ்தல விசுவாசப்பிரமாணம் ("Apostolicum") மற்றும் Nicaea- கான்ஸ்டான்டிநோபிள். அப்போஸ்தல விசுவாசப்பிரமாணத்தின் அடிப்படை அம்சங்கள் இரண்டாம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டு, நான்காம் நூற்றாண்டில் மறுசீரமைக்கப்பட்டன. Nicaea- கான்ஸ்டான்டிநோபிள் விசுவாசப்பிரமாணங்கள் 325ம் வருட காலகட்டத்தில் உதயமானது. Nicaea ஆலோசனைச் சங்கத்தினால் 381ல் சீரமைக்கப்பட்டது. தேவதிரித்துவத்தின் கிரியையை புனிதப்படுத்துவது இதன் பிரதான நோக்கமாயிருந்தது.

மூத்த மதத்தலைவர்கள் கூடிவந்து விசுவாசத்தின் முக்கிய காரியங்களைக் குறித்து கலந்தாலோசிக்கும் இடமாய் ஆலோசனை மன்றம் விளங்கினது.

ஆதிசபையின் விசுவாசப்பிரமாணங்கள் புதிய அப்போஸ்தல சபைக்கு எந்த முக்கியத்தை உடையன?

புதிய அப்போஸ்தல சபையின் கோட்பாடு வேதாகமத் தை அடிப்படையாய் கொண்டது. வேதாகமத்தில் உள்ளடங்கியிருக்கும் முக்கிய உட்கருத்தை ஆதிசபை விசுவாசப்பிரமாணங்கள் உள்ளடக்கின. திரியேக தேவனையும், இயேசுவை மெய்த்தேவனாகவும்,மெய் மனிதனாகவும்,கன்னி மரியாளில் இயேசு பிறந்ததையும், பரிசுத்தஆவி அனுப்பப்படுதலையும், சபையையும், தேவசடங்குகளையும், கிறிஸ்துவின் மறுவருகையில் எதிர்பார்ப்பையும், மரித்தோர் உயிர்த்தெழுதலையும், ஆதிசபைகள் அறிக்கைபண்ணினதைப்போல அப்போ ஸ்தல சபையும் அறிக்கைபண்ணுகிறது.

தனிப்பட்ட மதப்பிரிவுகளின் வேறுபாடுகள் காணப்பட்டாலும் கிறிஸ்தவர்களை இணைக்கும் அறிக்கைபண்ணுதலாக இது அமைகிறது.

"அறிக்கைபண்ணுதல்" என்பது விசுவாசப்பிரமாணம் என்று குறிப்பிடப்படுகிறது.

புதிய அப்போஸ்தல சபை விசுவாசப்பிரமாணங்களின் வாசகங்கள் என்ன?

பிதாவும், சர்வவல்லவரும், வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவருமான தேவனை நான் விசுவாசிக்கிறேன்.

பரிசுத்த ஆவியால் கர்ப்பந்தரிக்கப்பட்டு, கன்னி மரியாளினால் பிரசவிக்கப்பட்டவரும், பொந்தியு பிலாத்துவின்கீழ் பாடனுபவித்து, சிலுவையில றையப்பட்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, மரித் தோரின் மறுமையில் பிரவேசித்து, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, வானத்துக்கு எழுந்தருளியவருமான நமது ஆண்டவர், தேவனுடைய ஒரேபேறான குமாரன் இயேசுகிறிஸ்துவை நான் விசுவாசிக்கிறேன். அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார், அங்கிருந்து அவர் திரும்ப வருவார்.

பரிசுத்த ஆவியானவரையும், ஏகமும், பரிசுத்தமும், வியாபகமுமான அப்போஸ்தல சபையையும், பரிசுத்தவான்களின் ஐக்கியத்தையும், பாவங்கள் மன்னிக்கப்படுதலையும், மரித்தோர் உயிர்த்தெழுதலை யும், நித்திய ஜீவனையும் நான் விசுவாசிக்கிறேன்.

ஆண்டவராகிய இயேசு தமது சபையை ஆளுகை செய்கிறார், அதற்காக தமது அப்போஸ்தலர்களை அனுப்பினார், உபதேசிக்கவும், அவருடைய நாமத்தில் பாவங்களை மன்னிக்கவும், ஜலத்தினாலும் ஆவியினாலும் ஞானஸ்நானம் வழங்கவும் அதிகாரமளித்து அவருடைய மறுவருகை வரைக்கும் இன்னமும் அவர்களை அனுப்புகிறார் என்று நான் விசுவாசிக்கிறேன்.

தேவனால் ஊழியத்துக்காகக் குறிக்கப்படுகிறவர்கள் அப்போஸ்தலர்களினால் மட்டுமே நியமிக்கப்படு கிறார்களென்றும், அப்போஸ்தல் ஊழியத்திலிருந்தே அவர்களின் ஊழியத்துக்கான அதிகாரமும், ஆசீர்வாதமும், புனிதமும் வருகிறதென்றும் நான் விசுவாசிக்கிறேன்.

பரிசுத்தஆவிக்குள் மனிதன் புதிதாவதற்கான முதற் படியாய் பரிசுத்த ஞானஸ்நானம் உள்ளதென்றும், ஞானஸ்நானம் பெற்றவர் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவரைத் தங்கள் ஆண்டவராய் அறிக்கைபண்ணுகிறவர்களுக்குள் ஏற்றுக்கொள்ளப்ப டுகிறாரென்றும் நான் விசுவாசிக்கிறேன்.

ஒரேதடவை கொண்டுவரப்பட்ட, என்றென்றைக்கும் பெறுமதியான கிறிஸ்துவின் பலியையும், அவருடைய பாடுகளையும் மரணத்தையும் நினைவுகூரும்படிக்கு கர்த்தர் தாமே பரிசுத்த நற்கருணையை நிறு வினாரென்று நான் விசுவாசிக்கிறேன். பாத்திர வான்களாய் பரிசுத்த நற்கருணையில் பங்கேற்றல் நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுடன் ஜீவஐக்கி யத்தை உறுதிசெய்கிறது. புளிப்பில்லா அப்பத்துட னும் திராட்சரசத்துடனும் பரிசுத்த நற்கருணை கொண்டாடப்படுகிறது. இவ்விரண்டும் ஒரு அப்போ ஸ்தலரால் அதிகாரமளிக்கப்பட்ட ஊழியக்காரனால் புனிதமாக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் தேவ னுடைய பிள்ளைகளாய் மாறுவதற்காக பரிசுத்த ஆவியின் வரத்தை ஒரு அப்போஸ்தலன் மூலமாக பெற்றுக்கொள்ளவேண்டுமென்றும், அதன்மூலம் முதற்பலன்களாய் மாறுவதற்கான முன்தேவை யை அடைந்துகொள்ளவேண்டுமென்றும் நான் விசுவாசிக்கிறேன்.

கர்த்தர் இயேசு பரலோகத்துக்கு எழுந்தருளிச் சென்ற வண்ணமாகவே நிச்சயமாய் திரும்ப வருவார், நம்பிக்கையுடன் அவருடைய வருகைக்காக தம்மை ஆயத்தப்படுத்தினவர்களான முதற்பலன்களை மரித் தோரிலிருந்தும் உயிரோடிருக்கிறவர்களிடமிருந்தும் தம்முடன் எடுத்துக்கொள்வாரென்றும், பரலோகத்துக் கலியாணத்துக்குப் பின்பு அவர்களுடன் அவர் பூமிக்குத் திரும்பவந்து, அவருடைய சமாதான ராஜ்யத்தை நிறுவுவார், அவர்கள் அவருடன் ராஜரீக ஆசாரியத்துவத்தில் அரசாட்சி செய்வார்களென்றும் நான் விசுவாசிக்கிறேன். சமாதான ராஜ்யத்தின் முடிவில் கடைசி நியாயத்தீர்ப்பை அவர் நடத்துவார். பின்பு, தேவன் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டித்து தம் ஜனங்களோடு வாசஞ்செய்வார்.

தேவகட்டளைகள் மீறப்படாதபட்சத்தில், பூமியின் அதி காரங்களுக்குக் கீழ்ப்படிந்திருப்பதற்கு கடமைப்பட்டிருக் கிறேனென்று நான் விசுவாசிக்கிறேன்.

புதிய அப்போஸ்தல விசுவாசப்பிரமாணத்தின் முக்கியம் என்ன?

இந்த பத்து விசுவாசப்பிரமாணங்களும் சபையின் கோட்பாட்டை விவரிக்கின்றன. புதிய அப்போஸ்தல கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்வை இதற்கேற்ப நெறிப்படுத்துகிறார்கள். மேலும், புதிய அப்போஸ்தல விசுவாசத்தின் முக்கிய ஆதாரத்தில் பிறரும் பரிச்சய மடைந்துகொள்வதற்கு விசுவாசப்பிரமாணங்கள் வழி செய்கின்றன.

Masthead
Publisher: Jean-Luc Schneider, Überlandstrasse 243, CH-8051 Zurich/Switzerland
Verlag Friedrich Bischoff GmbH, Gutleutstrasse 298, 60327 Frankfurt/Germany
Editor: Peter Johanning

NAC International



# திரியேக தேவன்

திரியேக தேவன் யார்?
தேவன் ஆவியானவர், பூரணசற்குணர், பூரண சுயாதீனர். அவர் நித்தியமானவர், ஆரம்பமும் முடிவும் இல்லாதவர். ஒரே தேவன் பிதாவும், குமாரனும், பரி சுத்த ஆவியுமாய் விளங்குகிறார். "பிதா, குமாரன், பரிசுத்தஆவி" என்று நாம் குறிப்பிடும்பொழுது, மூன்று கடவுள்களை நாம் அர்த்தப்படுத்துவதில்லை, அதற்கு மாறாக, ஒரே தேவனான மூன்று ஆள் வடிவங்களைப் பொருள்படுத்துகிறோம்.

தேவனுடைய எந்த சிறப்புகளை நாம் அறிகிறோம்?
தேவனை பூரணமாய் விவரிப்பதற்கு மனிதன் திறனற்றவன். எவ்வாறாயினும், தேவனுடைய சிறப்புகளில் சிலவற்றை நாம் அறிந்திருக்கிறோம்: ஒரே தேவன் அவரே, அவரே பரிசுத்தர், சர்வவல்லவர், நித்தியமானவர், அன்பானவர், கிருபையுள்ளவர், நீதியுள்ளவர், பரிபூரணமானவர்.

பிதா, குமாரன், பரிசுத்தஆவி. இவர்களுக்கு இடையில் நிலவும் உறவு என்ன?
மூன்று திவ்விய ஆள்வடிவங்களின் நாமங்கள் பிதா, குமாரன், பரிசுத்தஆவி என்று அழைக்கப்படுகின்றன. அவர்கள் ஒருவரிலிருந்து மற்றவர் தனிநிலையில் அழைக்கப்பட்டாலும் அவர்கள் ஒரே தேவனாய் விளங்கு கிறார்கள். கிறிஸ்தவ பாரம்பரியத்தில், தெய்வீகமான இம்மூவரும் ஒரு குறிப்பிட்ட முக்கியத்துவத்தில் போற்றப்ப டுகிறார்கள். தேவனாகிய பிதா வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர். தேவனாகிய குமாரன், மனிதனாய் அவதாரமெடுத்து, தமது ஜீவனை மனித இனத்தின் மீட்புக்காக பலியிட்ட இரட்சகர். தேவனாகிய பரிசுத்தஆவி புதிய சிருஷ்டிப்பை உருவாக்குகிறவர். மனிதஇனத்துக்கு தேவனுடைய இரட்சிப்பு கிடைப்பதையும், புதிய சிருஷ்டிப்பு பூரணமடைவதையும் அவர் கவனித்துக்கொள்கிறார்.

தேவன் பிதா என்னும் உறவில் நாம் அழைப்பதன் அர்த்தம் என்ன?
தேவனுடன் நமக்குள்ள உறவில் அவரை 'பிதா'' என்று நாம் அழைப்பதில், அவர் திவ்விய சிருஷ்டிகர், அதிகாரமுள்ளவர், அன்பால் ஆதரிக்கிறவர் என்பதை வலியுறுத்துகிறோம். தாம் சிருஷ்டித்தவைகளுக்கு ஆதாரமும், போஷிக்கிறவரும் அவரே. இதனால், தேவனை சகல மனிதரும் தங்கள் சிருஷ்டிகரான ''பிதா'' என்று அழைக்கமுடிகிறது.

தேவனைப் பற்றி சிருஷ்டிப்பு எதைத் தெரிவிக்கிறது?
சிருஷ்டிப்பும் அது இயங்கும் நியதிகளும், மனிதனால் கற்பனைசெய்யவும் முடியாத மாட்சிமையான தேவனுடைய ஞானத்திற்கு சாட்சி பகர்கின்றன. மிகுந்த ஆச்சரியத்தோடு சங்கீதக்காரன் வியந்தான்: ''வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது'' (சங்கீதம் 19:1).

உலகைச் சிருஷ்டிப்பதற்கு தேவன் எடுத்துக்கொண்ட காலஅளவு என்ன?
தேவன் ஆறு ''சிருஷ்டிக்கும் நாட்களை'' எடுத்துக் கொண்டார். ''சிருஷ்டிப்பின் நாட்கள்'' என்னும் காலஅளவை துல்லியமாய் எவராலும் கணிக்கமுடியாது. தேவனுடைய சிருஷ்டிப்பில் ஒரு ''நாள்'' நமது காலக்கணிப்பிற்கு உட்படுகிற நாளுக்கு நிகராய் இருப்பதில்லை. ஆதியாகமம் 2:2 குறிப்பிடுகிறது: ''தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்.''

"கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம்வருஷம்போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள்போலவும் இருக்கிறது" (2 பேதுரு 3:8)). "உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக்கழிந்த நாள்போலவும் இராச்சாமம்போலவும் இருக்கிறது.'' (சங்கீதம் 90:4).

மனிதர் தம் புலனால் அறிந்துகொள்கிறவற்றை மட்டும் தேவ சிருஷ்டிப்பு உள்ளடக்கியிருக்கிறதா?
இல்லை. நமது கண்ணுக்குத் தெரியாத சிருஷ்டிப்புகளும் உள்ளன. தேவனைப்போலவே அவைகலும் மனித விசாரனையை விஞ்சிய மர்மங்கள். இருப்பினும் பரிசுத்த வேதாகமத்தில் மறுமை, சம்பவங்கள், நிலைமைகள், பூமிக்கு அப்பாற்பட்டவைகள் என்று காண்கிறோம்.

பிசாசு கண்ணுக்குத் தெரியாத சிருஷ்டிப்பின் பாகமா?

உற்பத்தியில் பிசாசானவன் ஒரு தேவதூதனாயிருந்தான். எனவே அவன் கண்ணுக்குத் தெரியாத சிருஷ்டிப்பின் ஒரு பாகம். தேவனுக்கு எதிராய் கலகம் செய்து, அவனது கீழ்ப்படியாமை, பொறாமை, பொய் முதலியவற்றின் காரணத்தினால் சொர்க்கத்திலிருந்தும் தேவனுடைய ஐக்கியத்திலிருந்தும் துரத்தப்பட்டான்.
“பாவஞ்செய்த தூதர்களை தேவன் தப்பவிடாமல் … நரகத்திலே தள்ளி ” (2 பேதுரு 2:4)).
“தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார். (யூதா 6).

தேவதூதரின் கடமைகள் யாது?
தேவனை வழிபடுவதும், அவரது கட்டளைகளை நிறைவேற்றுவதும், அதன்மூலம் தேவனை சேவிப்பதும் தேவதூதர்களின் கடமையாகும். தேவன் தம் தூதர்களை மனிதரைச் சேவிப்பதற்கு அனுப்பினதன்மூலம் மனிதர்மேல் அவருக்கிருக்கும் அன்பை வெளிப்படுத்துகிறார். தேவபிள்ளைகள் பிரத்தியேக காவலைப் பெறுவதை மத்தேயு 18:10ல் அறிகிறோம்:
“இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்பொழுதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.’’

தேவதூதர்கள் வழிபடவேண்டியவர்களா?
இல்லை. ஏனெனில், தேவதூதர்கள் தேவனுடைய சித்தத்தை மாத்திரம் செயற்படுத்துகிறார்கள். ஆதலால், அவர்களுக்கு அல்ல, தேவன் ஒருவருக்கே எல்லா நன்றியும் வழிபாடும் சேரவேண்டியதாகிறது.

‘‘இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?’’ (எபி. 1:14)

மனிதர்கள் ஏன் கண்ணுக்குத் தெரியாதவற்றைப் பற்றி கவலைப்படுகிறார்கள்?
ஆவி, ஆத்துமா, சரீரம் என்பவைகளின் கூட்டுப்பொருளானவன் மனிதன். (1 தெசலோனிக்கேயர் 5:23). சரீரம் கண்ணுக்குத் தெரிவது, இதனால் தேவனுடைய காணக்கூடிய சிருஷ்டிப்பாகும். ஆனால், ஆத்துமாவும் ஆவியும் தேவனுடைய கண்ணுக்குத் தெரியாத சிருஷ்டிப்புகளாகும். சரீர மரணத்திற்குப் பிறகும் ஆவியும் ஆத்துமாவும் தொடர்ந்து ஜீவிக்கின்றன. இக்கண்ணுக்குத் தெரியாததில் கருத்தாயிருப்பது அத்தியாவசியம். பூமியில் வாழும்பொழுது தேவனிடத்தில் மனிதனுக்கு இருக்கும மனோபாவம், அவனுடைய மறுவுலக ஜீவியத்துக்கான விளைவை உண்டுபண்ணும். இதில் கருத்தாயிருத்தல் பிசாசின் சோதனைகளை முறியடிப்பதற்கு உதவும். கண்ணுக்குத் தெரியாதவற்றின் முக்கியம் 2 கொரிந்தியர் 4:17-18ல் கூறப்படுகிறது.

# செப்டம்பர் 2015ல் நூல் வடிவத்தில்

புதிய அப்போஸ்தல சபையின் போதனாவிளக்க வினாவிடை நூல் இவ்வருடம் செப்டம்பர் மாதம் நூல் வடிவத்தில் வெளியிடப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. கடந்த மாவட்ட அபோஸ்தலர் மாநாட்டில் இது முடிவெடுக்கப்பட்டது. சபையில் பிரதானமாய் பேசப்படும் ஐந்து மொழிகளில் மொழிபெயர்ப்பு வேலைகள் முடிந்துவிட்டன. பிரசுரத்துக்கான இறுதி வேலைகள் நடக்கின்றன.

## பல்வேறு மொழிகளில்

போதனாவிளக்க வினா விடை நூல் ஆங்கிலம், ஜேர்மன், பிரெஞ்சு, ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கல் மொழிகளில் பிரசுரிக்கப்படமுடிந்தபொழுதும் அது பிறமொழிகளோடு சேர்ந்து வெளியிடப்படுவதை மாவட்ட அப்போஸ்தலர்கள் விரும்புகிறார்கள். மற்ற மொழிகளில் மொழிபெயர்ப்பு வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. கொங்கோ ஜனநாயக குடியரசில் பேசப்படும் மொழியில் மொழிபெயர்க்கப்படும் வேலை மிகவும் எதிர்பார்க்கப்படுகிறது, ஏனெனில், உலகெங்கும் உள்ள அங்கத்தவர்களில் மூன்றில் ஒரு பங்கு அங்கத்தவர்கள் இம்மொழியைப் பேசுகிறார்கள்.

## பாட நூல்


போதனாவிளக்கநூலை பாடநூல் வடிவத்தில் பிரசுரிப்பதற்கும் சபையின் தலைமை ஆலோசித்துவருகிறது. இக்காரணத்தினாலேயே போதனாவிளக்கநூல் 750 வினாக்களும் விடைகளும் அடங்கிய வடிவத்தில் உருவானது. புதிய அப்போஸ்தல விசுவாசத்தின் முன்னேற்றத்துக்கான திட்டக்குழுவினர் சுமார் பத்து வருடங்களாய் இதில் ஈடுபட்டுவருகின்றனர்.

கிறிஸ்தவ போதனாவிளக்கநூல்களைப் பொறுத்தவரையில், வினாக்களும் விடைகளும் ஏற்கனவே பல நூறுவருடங்களாய் பயன்படுத்தப்படுகின்றன. புதிய அப்போஸ்தல சபையிலும் இது ஒரு நீண்டகால பாரம்பரியத்தைக் கொண்டிருக்கிறது. இதன் பின்னணியல் இருக்கும் கற்பிக்கும் முறை நன்கு ஆராயப்பட்டு ஏற்படுத்தப்பட்டது. இவ்விதம், போதனாவிளக்க வினாவிடை நூலும் கற்பிப்பதற்கு ஏற்றவகையில் ஊழியக்காரர்களுக்கும், இளவயதினருக்கும், பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுப்பதற்குப் பயன்படும்.


1


2


3


4


5

Oliver Rütten

# 19+1: சபையின் தலைமை வாரியம் கூடுகிறது

புதிய அப்போஸ்தல சபையின் தலைமை வாரியம் சுவிட்சர்லாந்து சூரிச் நகரில் மார்ச் நடுப்பகுதியில் கூடிவந்தது. அப்படிப்பட்ட மாவட்ட அப்போஸ்தலர்கள் கூட்டம் எவ்வாறு நடக்கிறது? அதற்கு யார் வருகை தருகிறார்கள்? நிகழ்ச்சி நிரல் என்ன?

சூரிச் நகரில் அமைந்துள்ள தலைமையக அலுவலகத்தில் மாவட்ட அப்போஸ்தலர்களின் இக்கூட்டங்கள் ஆண்டுக்கு இருதடவைகள் நடைபெறுவது வழக்கம். தலைமையக அலுவலகத்தில் இதற்கான எல்லா தொழில்நுட்ப வசதிகளும் உள்ளன.

## சபையின் நிர்வாகிகள்

உலகின் எல்லா மாவட்ட அப்போஸ்தலர்களும் வந்திருந்தார்கள். தற்போது 19 மாவட்ட அப்போஸ்தலர்கள் பணிபுரிகிறார்கள். இக்குழுவுக்கு தலைவராக தலைமை அப்போஸ்தலர் ஜோன்-லூக் ஷ்னைடர் உள்ளார். சபையின் சர்வதேச அமைப்பின் சாசனத்தில் எழுதப்பட்டபடி, சபையின் நிர்வாகத்தை இக்குழுவே சரியான நெறியில் நிர்வகிக்கிறது. சாசனத்தின் 8ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது: “மாவட்ட அப்போஸ்தலர்களின் மாநாடு தலைமை அப்போஸ்தலருக்கு சபையின் எல்லா காரியங்களிலும் ஆலோசனையும் ஒத்தாசையும் வழங்குகிறது. புதிய அப்போஸ்தல சபையின் சகல மாவட்டங்களினதும் ஒருமைப்பாட்டைப் பேணும் பொறுப்பையும் இது கொண்டிருக்கிறது.

தற்போது மாவட்ட அப்போஸ்தல உதவியாளர்களாய் செயற்படும் ஒன்பது அப்போஸ்தலர்களும்

1| சபையின் தலைமையகத்திலுள்ள மாநாட்டு மண்டபம் 28 பிரதிநிதிகளுக்கு ஆசனவசதி வழங்குகிறது. மொழிபெயர்ப்பு வசதிகளும் உண்டு

2| மாவட்ட அப்போஸ்தலர்கள் மிகயேல் ஏரிச், ரூடிகர் க்றவுச மற்றும் றய்னர் ஸ்றோக் (இ-வ)

3| தென்னாபிரிக்காவின் மாவட்ட அப்போஸ்தலர் நோயல் பார்னஸ் தனது கருத்தை விவரிக்கிறார். ஆங்கிலம், ஜேர்மன் மொழிகள் கூட்டத்தில் பேசப்பட்டன.

4| கம்யூனிட்டி முதலாம் பதிப்பை தலைமை அப்போஸ்தலர் ஷ்னைடர் பார்வையிடுகிறார்.

5| மாநாட்டில் பங்கேற்றவர்கள்

மாநாட்டில் பங்கேற்றார்கள். மாநாட்டில் அவர்கள் பங்கேற்றாலும்கூட, வாக்களிக்கும் உரிமை அவர்களுக்கு இல்லை. தீர்மானங்களை நிறைவேற்றுகின்ற போது, மாவட்ட அப்போஸ்தலர் வாக்குகள் மட்டுமே கணக்கில்கொள்ளப்படும். நான்கில் மூன்று பெரும்பான்மை தீர்மானத்தை ஏற்கும் பொருட்டு தேவைப்படுகிறது. பெரும்பாலும் முடிவுகளை திட்டக்குழுக்கள் மூலம் கணக்கிடப்படும் விவரங்கள், மற்றும் விரிவாக்கங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

## கூட்டம் ஜெபத்தோடு துவங்குகிறது

ஒவ்வொரு நாளும் தலைமை அப்போஸ்தலர் ஜெபத்தோடு கூட்டத்தை துவக்குகிறார். அவருக்கு நெருக்கமான உதவியாளர்கள் அங்கிருப்பதனால், அவர் அங்கு செய்யும் ஜெபம் நீண்டதொரு உணர்ச்சி பூரணமான ஜெபமாய் அமைகிறது. உலகளாவிய சபையின் தேவைகளை மையப்படுத்துகிறதாய் அவருடைய ஜெபம் காணப்படுகிறது. ஜெபத்தின் விண்ணப்பங்களும் இவ்வாறு அமைகின்றன. எபோலா போன்ற வியாதிகள், யுத்தங்கள், குழப்பங்கள் முதலியவற்றினால் பாதிக்கப்பட்டிருக்கும் சபை அங்கத்தவர்களுக்காகவும் ஜெபிக்கப்படுகிறது.

மார்ச் 12-13 திகதிகளில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதானமாய் இறையியல் கருத்துகள் ஆலோசிக்கப் பட்டது. ஊழியங்கள் மற்றும் தலைமை அப்போஸ்தலரினால் ஆற்றப்பட்ட உரைகளின் சாராம்சங்களும் ஆலோசனைகளில் உள்ளடங்கின.

## இறையியலும் சபையின் உத்தியும்

தங்கள் சொந்த அனுபவங்களின் அடிப்படையிலும் மாவட்ட அப்போஸ்தலர்கள் பல்வேறு கருத்துகளை ஆராய்கிறார்கள். தொடர்ந்து விவாதிக்கப்படவேண்டியவை தீர்மானம் நிறைவேற்றப்படுவதில்லை. பொருளாதார உத்தியும் ஆலோசிக்கப்படுகிறது. சபைக்கூட்டங்களின் தேவைகள், வித்தியாசமான பாரம்பரியங்களின் அடிப்படையில் அமைகின்றன.

## இதயம், ஆத்துமா, மனதோடு

கடந்த மாவட்ட அப்போஸ்தலர் மாநாடு ஒரு தேவாராதனையோடு முடிவடைந்தது. நடந்து முடிந்த மாநாட்டைக் குறித்தும் தலைமை அப்போஸ்தலர் தேவாராதனையில் குறிப்பிட்டார்.



“நாள் கணக்காக நாங்கள் கூடிவந்து எதைப் பேசுகிறோம் என்பதை எப்பொழுதும் மனிதர் ஆவலோடு வியக்கிறார்கள்.” என்று மார்ச் 15ம் திகதி சுவிட்சர்லாந்து நொய்ஹவுசன் நகரில் நடந்த தேவாராதனையில் தலைமை அப்போஸ்தலர் கூறினார். மேலும் அவர் விவரிக்கையில்,

“கூட்டங்களை ஜெபத்தோடு துவங்குகிறோம். ஒரு தீர்மானத்தை எடுக்கவேண்டிய தருணங்களில் அதை ஜெபத்தோடு ஆராய்கிறோம், ஏனெனில், பரிசுத்த ஆவியின் தூண்டுதல் அதற்கு அவசியமாகிறது. அவரின்றி எதையும் நாம் செய்ய விரும்பவில்லை. நமக்கு அவசியமான அறிவையும் நாம் பெற்றுக்கொள்ள நாடுகிறோம். வேதாகமத்தில் என்ன கூறப்படுகிறது என்பதையும் கருத்தில்கொள்கிறோம். அதனடிப்படையில் நாம் ஆராய்கிறோம். நாம் ஊழிய நியமனத்தைப் பெற்றபொழுது நமக்குக் தரப்பட்ட அறிவாய் இது இருப்பதில்லை. நமது அனுபவங்களையும் நாம் பகிர்ந்துகொள்கிறோம். நமது உணர்ச்சிகளையும் பகிர்ந்துகொள்கிறோம். இவ்வாறு நமது சகோதர அன்பு நிறைந்த இருதயத்தை நாம் வெளிப்படுத்துகிறோம். சில காரியங்களில் இன்னமும் நமக்கு போதுமான தகவல்கள் கிடைப்பதில்லை என்பதை உணர்கிறோம். அப்பொழுது அதற்கான மேலதிக தகவல்களை நாடுகிறோம். சிலவற்றில், மேலும் நமக்கு காலம் அவசியமாயிருக்கிறது என்பதை அறிந்துகொள்கிறோம். பரிசுத்த ஆவியானவரின் பங்களிப்பு அதிகமாய் நமக்கு தேவைப்படுவதையும் நாம் அடிக்கடி உணர்ந்துகொள்கிறோம். ஆதலால், நாம் உண்மையோடு ஜெபிக்கிறோம்.”



NAC Austria